**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**
**கொழும்பு**

***************

**ஊடக அறிக்கை**

## இந்திய தயாரிப்பு கொவிட் தடுப்பூசிகளை உலகளவில் விநியோகிக்க ஆரம்பித்த COVAX

இந்திய தயாரிப்பான ஒக்ஸ்போட் அஸ்ட்ரேசெனேகா (Oxford-Astrazeneca) 600000 கொவிட் தடுப்பூசிகளை 2021 பெப்ரவரி 24 ஆம் திகதி கானாவுக்கு விநியோகித்ததன் மூலமாக கொவிட் தடுப்பூசிகளை உலகெங்கும் விநியோகிக்கும் பணிகளை கொவக்ஸ் (COVAX) ஆரம்பித்துள்ளது. கொவக்ஸ் வசதியின் கீழ் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட பல்வேறு நாடுகளுக்கான விநியோகப்பணிகளின் முதற்கட்டம் இதுவாகும்.

2. பெருநோய்க்கு எதிரான உலகளாவிய போராட்டத்தில் இந்தியா முன்னரங்கத்தில் இருக்கும் அதேநேரம் இந்த யுத்தத்தில் கூட்டு அணுகுமுறை மூலமாக இதற்கு தலைமை தாங்கப்படுகிறது. 2020 செப்டெம்பர் 26ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை அமர்வில் உரை நிகழ்த்திய இந்திய பிரதமர் நரேந்திர மோடி, " கொவிட் 19க்கு எதிரான போராட்டத்தில் இந்தியாவின் தடுப்பூசி உற்பத்தி திறன், விநியோக ஆளுமை ஆகியவை சகல மனிதர்களுக்கும் உதவிபுரியும்", என தெரிவித்திருந்தார். இந்த தத்துவங்களினால் வழிகாட்டப்பட்ட உலகின் மருந்தகமான இந்தியா, பல மில்லியன் கணக்கான தடுப்பூசிகளை இலங்கை உட்பட உலகின் பல்வேறு நாடுகளுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது. 2021 பெப்ரவரி 17 அன்று இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு பேரவை அமர்வில் உரை நிகழ்த்தியிருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி. எஸ்.ஜெய்சங்கர் அவர்கள் இந்தியாவின் தடுப்பூசி உதவிகளை மீள வலியுறுத்தியிருந்த அதேநேரம் தேசிய தடுப்பூசி என்ற கட்டமைப்புக்கு எதிராக தனது கருத்துக்களை பதிவு செய்ததுடன் சர்வதேசத்துக்கான தடுப்பூசிக்கு அழைப்பினை விடுத்திருந்தார்.

3. இந்தியாவின் ஆளுமையினை பிரயோகிக்கும் உறுதிப்பாடு முழு உலகினதும் ஆரோக்கியம் மற்றும் நலன்புரியுடன் மட்டும்

மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. உலகளவில் 150க்கும் அதிகமான நாடுகளுக்கு அத்தியாவசிய மருந்துகள், சுவாசக் கருவிகள், பி.பி.ஈ தொகுதிகள் போன்றவற்றை இந்தியா வழங்கியுள்ளதுடன் இதில் 80 நாடுகளுக்கு அவை நன்கொடையாகவே வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

4. கொவிட் - 19 நெருக்கடியான காலப்பகுதியில் இந்தியாவும் இலங்கையும் மிகவும் நெருக்கமான ஒத்துழைப்பை பேணி வருகின்றன. இக்காலப்பகுதியில் 26 தொன்கள் அத்தியாவசிய மருந்துப்பொருட்களை இந்தியா இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இதுவரையில் இந்தியாவிடமிருந்து மட்டுமே இலங்கைக்கு கொவிட் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இரண்டாவது தொகுதியான 500000 தடுப்பூசிகள் 2021 பெப்ரவரி 25 ஆம் திகதி கொழும்பை வந்தடைந்தன. முதற்தொகுதியான 500000 தடுப்பூசி இந்தியாவால் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தமை இச்சந்தர்ப்பத்தில் நினைவில்கொள்ளவேண்டிய விடயமாகும்.

**************

கொழும்பு
25 பெப்ரவரி 2021